THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No. 41 /2022**

Deposition of RW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 16.**02.2024**

**Evidence Recorded Time: 1.15 P.M.. to 1.25 P.M.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மீனாகுமாரி** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | சுதர்சன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**:–

நான் மேட்டூர் வட்டார போக்குவரத்து ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. அதன் படி அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் சாட்சி அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட TN 30 V 5532 Hero Honda Motor cycle சம்மந்தமான மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும். மேற்படி சா.சா.ஆ.1ல் வாகனத்தின் உரிமையாளர் பெயர் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பழனிசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வண்டியை ஓட்டியவர் அவரேதான். ஆய்வுக்கு உட்படுத்தும் போது அதற்கான வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதற்கான சார்ஜ் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு இன்சூரண்ஸ் இல்லை என்று அதற்கும் சார்ஜ் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை –

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு மனுதாரர் பழனிசாமியை வரவழைத்து விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி பழனிசாமிக்கு ஒரு வேளை நாங்கள் விசாரித்திருந்தால் அவர் ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தது தெரிய வந்திருக்கும் என்றால் நாங்கள் ஆன்லைனில் பார்த்து அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரிய வந்தது. ஓட்டுநர் உரிமம் எடுக்கப்பட்டு அதை புதுப்பிக்கப்பட்டிருந்தால் அது எங்களுக்க தெரிய வராது என்றால் சரியல்ல. புதுப்பிக்கப்பட்டாலும் அது பற்றிய பதிவு

ஆன்லைனில் பார்க்கலாம். பழனிசாமி ஓட்டுநர் உரிமம் எடுத்து அதை புதுப்பிக்கவில்லை என்பது சம்மந்தமாக நான் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் புதுப்பிக்கவில்லை என்பது தெரிய வந்தது. என்னிடம் காட்டப்படும்ஓட்டுநர் உரிமம் பழனிசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். 23.01.2007 அன்று வழங்கப்பட்டுள்ளது. 11.12.2019 ல் அது முடிவடைகிறது. நான் சரியாக விசாரிக்காமல் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக் கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/– RW1

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.